22.07.2026

PW.1 முத்து

MCOP. No. 357/2025

ம.சா.1 கடந்த 02.07.2026 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட பின்பு,

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் இன்று குறுக்கு விசாரணை :**

1. விபத்து குறித்து நான் தான் புகார் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு மேல் நடவடிக்கை என்ன எடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் இருந்தது. எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை காட்டுவதற்கான ஓட்டுனர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டில் இருக்கிறது. நான் விபத்து சமயத்தில் நடந்து தான் வந்தேன். நான் வீட்டில் இருந்து வண்டியை ஓட்டி வந்தேன் என்றால் பெட்ரோல் இல்லாததால் தள்ளிக் கொண்டு வந்தேன். இருசக்கர வாகனத்தில் வரும் வழியில் பெட்ரோல் இல்லாததால் தள்ளிக் கொண்டு வந்தேன்.

2. சம்பவம் நடந்த இடத்தை காட்டக்கூடிய போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். சம்பவம் நடந்தது மண் ரோட்டில் இருந்து தார் ரோட்டில் 10 அடி தூரம் இருக்கும் என்றால் ஆமாம். இந்த விபத்தானது நடுரோட்டில் நடந்ததால் இந்த விபத்திற்கு எங்களது கவனக்குறைவு தான் காரணம் ஆகையால் எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என் மீது மோதியதாக சொல்ல கூடிய ஒன்றாம் எதிர்மனுதாரர் வாகனம் ஓட்டிய ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

3. ஒன்றாம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஒட்டி வந்த ஓட்டுநர் மது போதையில் இருந்தாரா என்றால் ஆமாம். விபத்து நடந்த உடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். 05.11.2024 ஆம் தேதிக்கு பின்னர் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எதிர்கால மருத்துவ செலவு கோரி பரிகாரம் கேட்டுள்ளேன் அதை நிரூபணம்

செய்வதற்கு மருத்துவ ஆவணங்கள் எதுவும் தனியாக குறிப்பிட்ட தாக்க செய்யவில்லை என்றால் ஆமாம். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும், அது சிகிச்சையில் குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

4. நான் மரம் ஏறி தொழில் செய்து வருவதாக சொல்லி உள்ளேன் அதனை நிரூபணம் செய்வதற்கு சங்கத்தில் பதிந்த அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டில் இருக்கிறது. விபத்தினால் எனக்கு எந்த வித வருமான இழப்போ நிரந்தர ஊனமோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் மிகைப்படுத்தி இழப்பீடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும், மது போதையில் வாகனத்தை ஓட்டியதாலும் இரண்டாம் எதிர்மனுதாரர் காப்பீடு நிபந்தனைகளின் படி இழப்பீடு கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தாரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

A MUTHU ESAKKI
Digitally signed by A MUTHU ESAKKI
Date: 2026.07.22 17:56:39 +0530

நான்காம் கூடுதல் சார்பு நீதிபதி,

மதுரை.